# யூன் – 27 - செவ்வாய்

புனித அலெக்சான்டிரியா சிறில்
மாசற்றவராய் நடப்போரே! இன்னோர் நேரியவற்றைச் செய்வர்: உளமார உண்மை பேசுபவர்: திபா. 15:2

## முதல் வாசகம் : தொடக்க நூல் 13 : 2, 5 - 18

அப்பொழுது ஆபிராம் கால்நடைகளும் வெள்ளியும் தங்கமும் கொண்ட பெரிய செல்வராக இருந்தார். ஆபிராமுடன் சென்ற லோத்துக்கும் ஆட்டு மந்தைகளும் மாட்டு மந்தைகளும் கூடாரங்களும் இருந்தன. அவர்கள் சேர்ந்து வாழ்வதற்கு இடம் போதவில்லை. அவர்களுக்கு மிகுதியான உடைமைகள் இருந்ததால், அவர்களால் சேர்ந்து வாழ முடியவில்லை. ஆபிராமின் கால்நடைகளை மேய்ப்போருக்கும் லோத்தின் கால்நடைகளை மேய்ப்போருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. அப்பொழுது கானானியரும் பெரிசியரும் அந்நாட்டில் வாழ்ந்து வந்தனர். ஆபிராம் லோத்தை நோக்கி, ”எனக்கும் உனக்கும் என் ஆள்களுக்கும் உன் ஆள்களுக்கும் இடையே பூசல் ஏற்பட வேண்டாம். ஏனெனில் நாம் உறவினர். நாடு முழுவதும் உன் கண்முன் இருக்கின்றது அல்லவா? என்னிடமிருந்து பிரிந்து செல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். நீ இடப்பக்கம் சென்றால் நான் வலப்பக்கம் செல்வேன் நீ வலப்பக்கம் சென்றால் நான் இடப்பக்கம் செல்வேன்” என்றார். லோத்து கண்களை உயர்த்தி எங்கும் நீர்வளம் சிறந்திருந்த யோர்தானின் சுற்றுப்பகுதியைக் கண்டார். சோகார் வரை அப்பகுதி ஆண்டவரது தோட்டம் போலும் எகிப்து நாட்டைப் போலும் இருந்தது. சோதோம், கொமோராவை ஆண்டவர் அழிப்பதற்கு முன் அது அவ்வாறிருந்தது. லோத்து யோர்தான் சுற்றுப்பகுதி முழுவதையும் தேர்ந்துகொண்டு கிழக்குப் பக்கமாகப் பயணமானார். இவ்வாறு ஒருவர் ஒருவரிடம் பிரிந்தனர். ஆபிராம் கானான் நாட்டில் வாழ்ந்து வந்தார். லோத்து யோர்தான் சுற்றுப் பகுதியிலிருந்த நகரங்களில் வாழ்ந்துவந்தார். இறுதியில் சோதோமுக்கு அருகில் கூடாரம் அமைத்துக்கொண்டார். ஆனால் சோதோமின் மக்கள் ஆண்டவருக்கு எதிரான மிகக்கொடிய பாவிகளாக இருந்தனர். லோத்து ஆபிராமிடமிருந்து பிரிந்தபின், ஆண்டவர் ஆபிராமை நோக்கி, ”நீ இருக்கும் இடத்திலிருந்து உன் கண்களை உயர்த்தி வடக்கே, தெற்கே, கிழக்கே, மேற்கே பார். ஏனெனில் நீ காணும் இந்த நாடு முழுவதையும் உனக்கும் உன் வழிமரபினருக்கும் என்றென்றும் கொடுக்கப்போகிறேன். உன் வழிமரபினரைப் பூவுலகின் மண்ணைப் போலப் பெருகச் செய்வேன். ஆகவே பூவுலகின் மணலை ஒருவன் எண்ண முடியுமானால், உன் வழிமரபினரையும் எண்ணலாம். நீ எழுந்து, இந்நாட்டின் நெடுகிலும், குறுக்கிலும் நடந்து பார். ஏனெனில் இதை நான் உனக்குக் கொடுக்கப் போகிறேன்” என்றார். ஆகவே ஆபிராம் தம் கூடாரத்தைப் பிரித்துக் கொண்டு எபிரோனிலிருந்த மம்ரே என்ற கருவாலி மரத்தோப்பருகில் வந்து வாழ்ந்தார். அங்கே ஆண்டவருக்கு ஒரு பலிபீடம் எழுப்பினார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம் கூடாரத்தில் தங்கிடத் தகுதியுள்ளவர் யார்?

## நற்செய்தி : மத்தேயு 7: 6, 12 – 14

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: தூய்மையானது எதையும் நாய்களுக்குக் கொடுக்க வேண்டாம். அவை திருப்பி உங்களைக் கடித்துக் குதறும். மேலும் உங்கள் முத்துகளைப் பன்றிகள் முன் எறிய வேண்டாம் எறிந்தால் அவை தங்கள் கால்களால் அவற்றை மிதித்து விடும். ஆகையால் பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இறைவாக்குகளும் திருச்சட்டமும் கூறுவது இதுவே. இடுக்கமான வாயிலின் வழியே நுழையுங்கள் ஏனெனில் அழிவுக்குச் செல்லும் வாயில் அகன்றது வழியும் விரிவானது அதன் வழியே செல்வோர் பலர். வாழ்வுக்குச் செல்லும் வாயில் மிகவும் இடுக்கமானது வழியும் மிகக் குறுகலானது இதைக் கண்டுபிடிப்போர் சிலரே“ என்றார்.

**தியானம்:** அன்பு, பகிர்வு, சமாதானம் இவற்றகை கடைப்பிடித்து இறைவனிடம் நாங்கள் சென்றடைய வருந்தி உழைக்க வேண்டும் என்றும், பிறா் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கின்றீா்களோ அவற்றை அவா்களுக்கு செய்யுங்கள் என்றும் இன்றைய இறைவாா்த்தைகள் கூறுகின்றது. மற்வா்களுக்கு உதவி செய்து வாழ்வது என்பது எமக்கு கஷ்டமாகத்தான் இருக்கும். ஏனெனில் நான், எனது, என்னுடையது, நான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற மற்றவா்களைப் பற்றிக் கவலைப்படாத மனநிலையோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் மற்றவா்களுக்குச் செய்வதெல்லாம் எனக்கே செய்தீா்கள் என்று இறைமகன் இயேசு கூறுகிறாா். அவ்வாறு அன்பு செய்து வாழாது இருந்தோமானால் இறுதிக்கால வேளையில் நான் உம்மோடு உண்டேன், குடித்தேன் என்று நாங்கள் கூறும் பொழுது உங்களை எனக்குத் தெரியாது என்று அவா் எங்களை விலக்கிவிடுவாா். அதற்காகவே அன்று இராப்போசன வேளையில் அன்பு, பகிா்வு கொண்டு எவ்வாறு வாழவெண்டுமென்று எமக்கு கற்றுக்கோடுத்தாா். எனவே மற்றவா்களுக்கு எவ்வாறான தேவைகள், கஷ்டங்கள் எதுவானாலும் அவா்களுடன் பகிா்ந்து கொண்டு இன்புற்று வாழ செபவாழ்வை எமதாக்கிக் கொள்வோம்.